# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in**

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 45/2015**

திரு. நா. முத்தாங்கோனார்,
த/பெ நாதன் கோனார்,
கதவு எண்.188, 225 கிழக்கு தெரு,
மாத்தூர் மற்றும் அஞ்சல்,
சின்னசேலம் வட்டம்,
விழுப்பரம் மாவட்டம் ........மேல் முறையீட்டாளர்

எதிர்

செயற் பொறியாளர்,
கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ராஜம்பாள் நகர்,
கள்ளக்குறிச்சி – 606 202

......... எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 31–7–2015**

1. திரு. நா. முத்தாங்கோனார், த/பெ நாதன் கோனார், மாத்தூர் அவர்களின் 15.5.2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.45/2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் அவருடைய மின்னிணைப்பு எண்.554–001–150இல் 9/2013 முதல் 3/2014 வரையிலான காலங்களுக்கான மொத்த மின்கட்டணம் ரூ.1483/– என்று வசூலிக்கப்பட்டுள்ளது. அவரின் மின்பளு 0.180 வாட்ஸ் என்றும் மற்றும் பயன்பாடு 16 யூனிட்டுகள் என்பதாலும் மேற்கண்ட தொகை அதிகம். எனவே, அதிகமாக வசூலிக்கப்பட்ட தொகையை எதிர்வரும் மாதகட்டணத்தில் கழித்து உத்தரவு வழங்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் செயற்பொறியாளர்/கள்ளக்குறிச்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் ஏற்படவில்லை என்றால் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 22.5.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4 எதிர்மனுதாரர், 15.6.2015 நாளிட்ட அவருடைய பதிலுரையை சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட பதிலுரையில் தலைவர், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கள்ளக்குறிச்சி, அவர்களின் 28.3.2015 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், மேற்கண்ட மின்னிணைப்பு எண்.554–001–150இல் 0.200 கி.வா மின்சுமை மட்டுமே பயன்படுத்தி வருவதாலும் கூடுதலாக வசூல் செய்யப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ள தொகை ரூ.1200/–ஐ 4.6.2015ல் மேல்முறையீட்டாளரின் கணக்கில் சரிசெய்து (adjustment) கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் அவருடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக கேட்புரை 20.8.2015 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக நடைபெறும் என்று 21.7.2015 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

6. மேற்கண்ட கேட்புரை கடிதத்தை பெற்ற பின்பு, மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு எண் 150க்கு அவரால் அனுப்பப்பட்ட அனைத்து புகார்களையும் திரும்ப பெறுவதாக அவருடைய 27.7.2015 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார். அந்த கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கடிதத்திலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“எனக்கு மேற்கொண்டு பார்வை எண்.01இன்படி உயர்திரு. செயற்பொறியாளர் அவர்கள்/கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கள்ளக்குறிச்சி அவர்களிடம் இருந்து 11.6.2015 தேதியிட்ட தீர்ப்பு நகல் பெற்றுக்கொண்டேன். அதில் கூறப்பட்டுள்ள அனைத்து விஷயங்களை படித்து தெரிந்து கொண்டேன். எனக்கு வழங்கப்பட்ட இந்த தீர்ப்பு நகல் தங்களுக்கு முறையாக தெரிவித்து இருக்கவேண்டும். என்ன காரணம் எனில் நான் விவசாயத்தில் ஈடுபட்டு மன உளைச்சல்*

*காரணமாக மேற்கண்ட தீர்ப்பு நகல் அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் எனக்கு தோன்றவில்லை என்பதாலும்,*

*மேலும், பார்வை 02இன்படி தாங்கள் எனக்கு 21.7.2015 தேதியிட்ட தபால் அனுப்பியதை பெற்றுக்கொண்ட பின்புதான் செயற்பொறியாளர் அவர்கள்/க.மி.ப.வ./த.நா.மி.உ.ம.ப கழகம்/கள்ளக்குறிச்சி அவர்களின் 11.6.2015 தீர்ப்பின் நகலை மேன்மைமிகு தங்கள் சிறப்பு பார்வைக்கு அனுப்பி வைக்கிறேன். என்னை மன்னிக்க வேண்டுமாயும் இத்துடன் மாத்தூர் மின்இணைப்பு எண்.150க்கு என்னால் எழுதப்பட்ட அனைத்து புகார்களையும் திரும்ப பெறுவதுடன் மாத்தூர் மின் இணைப்பு எண்.150க்கு உண்டான கோரிக்கைகளை இத்துடன் முடித்துக் கொள்கிறேன் என்பதை மிக பணிவன்புடன் தங்கள் சிறப்பு கவனத்துக்கு தெரிவித்துக் கொள்கிறேன்."*

7. மேற்கண்ட கடிதத்தில், மேல்முறையீட்டாளர் அவருடைய மின் இணைப்பு எண்.150க்கு அவரால் எழுதப்பட்ட அனைத்து புகார்களையும் திரும்ப பெறுவதுடன் மாத்தூர் மின்னிணைப்பு எண்.150க்கு உண்டான கோரிக்கைகளையும் இத்துடன் முடித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.45/2015 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

**<u>பெறுநர் :</u>**
**1)** திரு. நா. முத்தாங்கோனார்,
த/பெ நாதன் கோனார்,
கதவு எண்.188, 225 கிழக்கு தெரு,
மாத்தூர் மற்றும் அஞ்சல்,
சின்னசேலம் வட்டம்,
விழுப்பரம் மாவட்டம்

2) செயற் பொறியாளர்,
கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ராஜம்பாள் நகர்,
கள்ளக்குறிச்சி – 606 202

3) மேற்பார்வை பொறியாளர்,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
லயன் கிளப் பில்டிங்,
கள்ளக்குறிச்சி

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.